

KANGAI PONKGUTHU


# கங்கை பொங்குது

அருட்கவிதை முத்துக்குவியல்



வேலணை வேணியன்





கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வாங்கியது,
23-3-2003.

# கங்கை பொங்குது

# Kangai Ponkguthu

அருட்கவிதை முத்துக்குவியல்

வேலணை வேணியன்

KANGAI PONGKUTHU

(Arutkavithai Muthukkuvial)

VERSE COLLECTION

OF

VALANAI VENIAN

1st Editon 1987 May,

Price Rs. 25/=

1000 Copies

Published by

VENNIANS ASSOCIATES

"SUVYAGAM"

VELANAI

Printers: –

The Meihandan Press Limited,
161, Sea Street, Colombo Sri Lanka.

''இந்நூலின் குறைகளை மறந்து நிறைவுகளைக் கற்பனைக் கருத்துக்களை மேற்கொள்ள வாசகர்களைப் பணிவுடன் வேண்டுகின்றேன்''

—வேலணை வேணியன்

**இந்நூலில் இடம்பெறும் கவிதைகள்**
**அனைத்தும் மானிப்பாய் மருதடி**
**விநாயகர்தம் திருமென்மலர் பாதங்**
**கட்கு என் காணிக்கை,**

**—வேலணை வேணியன்**

''கங்கை எங்கும்பொங்கியே கன்னித் தமிழ்வளர்ந்திட
தங்கமான நூலுக்கு தமிழில் பெயரும் சூட்டினேன்
உங்களாசி தன்னுடன் உவகையோடு தருகின்றேன்
எங்கள் இறைவன் துணையினால் என்றும் நீங்கள்வாழியே'

—வேலணை வேணியன்

அன்பளிப்பு
அமரர் தி... ஆச்சிப்பிள்ளை
... - பண்ணாகம், சுழிபுரம்)
... வழங்கப்பட்டது.
... தமாக

# என் நோக்கு!

இளமை முதல் எழுத்தார்வம் அருட்கவிதை உருவில் வெளியிடுவதற்கு காரணம் என் தமிழன்னை மீது கொண்ட பாசம். அத்தோடு அன்றுதொட்டு அவள் உயர்வுக்கு அயராது உழைத்த, உழைத்து வரும் பெரியோர்கள் மீதும், பக்கத்துணை இரத்த பாசங்கள் மீதும், வானுலகெய்தியோர் கள் மீதும் கொண்ட தனிப்பெரும் பாசம். என்றும் என் உள்ளத்தே அழகில் மிகுந்தவளாகவும் சுவைக்க அமுதிலும் இனியவளாகவும் பெண் உருவில் என் மனதில் தமிழன்னை கொலுவீற்றுள்ளால் என்பதில் வியப்பில்லை. அவள் ஆற்ற முடியாத் துயர்கண்டே அருட்கவிதைகள் என் மெட்டுக்கிசை யப் பாடத்தொடங்கிப் பத்திரிகைகள் தம் பிரசுரத்துக்கு அனுப் பத்தொடங்கினேன். இறையருளால் அவை வெளிவந்து என் உள்ளத்தைத் தனிப்பெரும் புளகாங்கிதம் கொண்டு நூலுரு வில் வெளியிடவும் ஊக்கமளித்தது. இதற்குப் பல்துறைப் பெரியார் கள் ஊக்குவிப்புகளும் அருட்கொடையாகப் பெற் றேன். என் விடா முயற்சியும் இறை நம்பிக்கையும் என் முதல் மகளாக இன்று உங்கள் ஒவ்வொருவர் கரங்களிலும் தவழ்ந்து என்னை உளம்குளிர வைத்துப் பொங்கிவிட்டாள் கங்கை. "பொங்கிய கங்கையால் தமிழன்னை புது மலர்ச்சி காண வேண்டும் என்பதே பணிவன்பின் நோக்கும் பிரார்த்தனை யு மாகும்.

வணக்கம்

— வேலணை வேணியன்

[illegible library stamp]

அன்பளிப்பு
அமரர் திருமதி [illegible] ராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - [illegible])
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது

## "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

## "அன்னை புகழ் எங்கும் பரவட்டும்"

ஒன்றே குலம் ஒருவனே தேவன்
என்றே கூறி, நன்றே கடவுள்,
கர்த்தர், அல்லாஹ், புத்தர்
என்றே திருநாமங்கள் கூறியும்
கொன்றே குவிக்கும் நிலையதை
மாற்றியே தாய்த் திருநாட்டின்
மக்கள் சமாதான நற்பணி
செய்குவோம்.

வரீர்! வாரீர்!! வாரீர்!!!

—வேலணை வேணியன்

உ

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

.. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம் – ஆதீன முதல்வர்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

பருத்தித்துறை வீதி நல்லூர்.

யாழ்ப்பாணம், இலங்கை

தொலைபேசி : 24018

திகதி 8.8.1986

சைவ மெய்யன்பர்களே !

கவிஞர் திரு. வேலணை வேணியன் அவர்கள் ''கங்கை பொங்குது'' எனும் அருட் கவிதைத் தொகுப்பு நூல் ஒன்றினை வெளியிடுவதறிந்து மிக மகிழ்ச்சியடைகிறேம். சைவமும், தமிழும் வளரவேண்டும் என்ற அவா உந்தப்பெறும் அறிஞர்களுக்கே இத்துணை ஆர்வம் உதயமாகும். அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து உதவ வேண்டியது சைவமக்களின் கடமையாகும்.

எல்லா உயிரினங்களும் நாடுவது மனவமைதியும் இன்பமுமேயாகும். இதற்கு உறுதுணையாய் அமைவது இறை வழிபாடு, தியானமுமேயாகும்.ம் வழிபாடாற்றும் பொழுது அருட்கவிகளை ஓதி உணர்தல் இன்றியமையாதது. இதனை அநுபவ மூலமாகவே அறிந்து கொள்ளலாம்.

ஆசிரியர் மேன்மேலும் இன்னோரன்ன நல்லாக்கங்களை சைவ உலகுக்குத் தொகுத்தளிக்க இறைவனை உளமார வேண்டி ஆசீர்வதிக்கின்றேம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்

## ஸ்ரீ சிவராஜ விநாயகர் தேவஸ்தானம்
(மஹாராஜா சத்திரம்)

99, ஜிந்துப்பிட்டி,
கொழும்பு—13
23.05.1987

அருட்கவிஞர் வை. கங்கைவேணியன் அவர்களின் பெரும் கவிப்படைப்பான " கங்கை பொங்குது " அருட்கவிதை முத்துக்குவியல் தொகுப்பு நூல் எமது தமிழ் மக்களுக்கும் நாட்டுக்கும் மதச் சார்புகள் அற்ற ஒரு வரப்பிரசாதகமாகும்.

இனிய தமிழிலே எளிய நடையிலே அவர் உருவாக்கியுள்ள இந்த நூல் எல்லா மக்களுக்கும் பயனுடையதாக அமைய எல்லாம் வல்ல சபரிமலை ஸ்ரீ ஐயப்பசுவாமியின் திருவருளை வேண்டி " வேலணைவேணியன் " பல்லாண்டு! பல்லாண்டு! வாழ்க என்று ஆசீர்வதிக்கின்றேன்.

**ஸ்ரீ ஐயப்பதாஸன் - சரவண பவ சாம்பசிவக் குருக்கள்**

பீடாதிபதி: அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம்

இந்து மதத்தலைவர் : ஸ்ரீ லங்கா சர்வமத சமாதான இயக்கம்.

பிரதமகுரு : ஸ்ரீ சிவராஜ விநாயகர் தேவஸ்தானம்

சகோதரர் டி. ஜி. எஸ். தினகரன் ஆசிகள்

# இயேசு அழைக்கிறார்

(அரசு அங்கீகாரம் பெற்ற அற-மத நிறுவனம்)

''ஜெய கோபுரம்''
16, கிரீன்வேஸ் சாலே,
சென்னை 600 028.
தொலேபேசி : 417753
தேதி 25.02.1986

ஸ்தாபகர் :
சகோதரன் டி. ஜி. எஸ். தினகரன் B.Sc., C.A I.I.B.

கிறிஸ்துவுக்குள் அன்புடையீர் !

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள் !

சொல்லி முடியாத துக்கத்தோடும். மனக் கலக்கத்தோடும் பலவிதத் தேவைகளுக்காக என் ஜெபத்தை நாடி நீங்கள் எழுதிய விபரமான கடிதம் வந்து கிடைத்தது. அதை வாசித்து என் உள்ளம் வேதனையினால் உடைந்தது. உடன் தானே, உங்கள் விணப்பங்களுக்கும், உங்கள் எதிர்பார்க்குதலுக்கும் தேவன் கட்டயாம் பதில் அளிக்க வேண்டுமென்று கண்ணீருடன் பிரார்த்தித்தேன். இயேசு நிச்சயம் உங்கள் பிரச்சினைகளை மாற்றிப் போடுவார். சந்தோஷத்தையும், சமாதானத்தையும் அருளிச் செய்வார்.

மெய்யாகவே இயேசு நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு நம்முடைய துக்கங்கள் யாவையும் சிலுவையில் சுமந்தபடியினால் (ஏசாயா 53 : 4) அவரே உங்கள் பயத்தையும், உங்களைச் சூழ்ந்துள்ள மலை போன்ற பிரச்சினைகளையும் பனிபோல உங்களிலிருந்து எடுத்துப் போடுவார். அவரே உங்கள் ஒவ்வொருவரின் விருப்பங்களையும் நிறைவேற்றுவார். அவரே எல்லாவற்றையும் நன்மையும் செம்மையுமாய் நடத்தி முடிப்பார்.

தேவ ஆசிர்வாதம் உங்கள் குடும்பங்களில் நிலைத்திருக்க நீங்களும் அனுதினமும் காலையும் மாலையும் வேதகாமத்தை வாசித்து ஜெபியுங்கள் அப்படிச் செய்வீர்களேயானால் இயேசு தாமே உங்கள் இருதயத்தின் வேண்டுதல்களையெல்லாம் நிச்சயம் உங்களுக்கு அருளிச் செய்வார். உங்களை ஆசிர்வதித்து வழிநடத்துவார். உங்கள் பிரச்சினைகளுக்கெல்லாம் தேவன் இன்றே ஒரு முற்றுப்புள்ளியை வைக்க வேண்டுமென்று மிகுந்த பாரத்துடன் ஜெபித்துள்ளேன்.

அன்பு !

கிறுஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரன்...,
(டி. ஜி. எஸ். தினகரன்)

திரு. வை. கங்கைவேணியன் அவர்கட்கு
" என்கர்த்தர் இல்லம் "
கொழும்பு

# கிராமிய தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சு

த. பெ. 1544, 273,
காலி வீதி,
கொழும்பு—3
24.09.1986

" கங்கை பொங்குது " என்ற தலைப்பிலே " கங்கை வேணியன் " தமது அருட்கவிதைகளை நூல் வடிவாகத் தயாரித்துள்ளார்.

"வேணியன்" கவிதைகள் வீரகேசரி, தினகரன் போன்ற பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. அவற்றின் மூலம் " கங்கைவேணியன் " தமது கவித்துவத்தை வெளிக் கொணர்ந்து, அக்கவிதைகள் மக்களின் நல்லாதரவைப் பெற்றிருக்கின்றன. அந்தக் கவிதைகளெல்லாம் ஒன்றாகத் திரட்டப்பட்டுக் " கங்கை பொங்குது " புத்தக வடிவில் வருவது கண்டு மனமிக மகிழ்கின்றேன்.

தமிழுக்குச் சிறந்த தொண்டாற்றும் வேணியன் இது போன்ற பல நூல்களை வெளியிட்டுத் தமிழன்னைக்கு ஆரமாக வழங்கவேண்டுமென ஆசீர்வதிக்கின்றேன்.

" கங்கைவேணியன் " முயற்சி மென்மேலும் வளர்க.

(ஒப்பம்) சௌ தொண்டமான்

## செல்லையா இராசதுரை

பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

திரு. வை. கங்கைவேணியன்
424, சங்கராஜ மாவத்தை
கொழும்பு—10
25.09.86

இருபது ஆண்டுகளுக்கு மேலாக உங்கள் இதயத்தை நெருடி பீறிட்டுப் பாய்ந்த அருட் கவிதைகள் " கங்கை பொங்குது " என்னும் தலைப்பில் நூல் வடிவில் வெளியாவது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

" கங்கை பொங்குது " என்னும் நூலின் தலைப்பு குளிர்ச்சியாக இருக்கின்றது. பொருள் நிரம்பியதாகவும் அமைந்திருக்கின்றது.

தங்கள் முயற்சி வெல்க! தொடர்ந்து நல்ல கவிதைகள் தங்கள் இதயத்திலிருந்து வற்றாத கங்கைபோல் ஊற்றெடுத்துப் பாயவேண்டும் என்று அவாவுறுகிறேன்.

பகவான் திருவருளால் தங்களுக்கு நிறைந்த செல்வமும், நீடித்த வாழ்வும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

(ஒப்பம்) செ. இராசதுரை
பிரதேச அபிவிருத்தி அமைச்சர்.

**K. V. S. VAS M. A, J. P.**
Correspondent
THE HINDU, Madras.
TAMIL NESAN, Malaysia.
Rtd. Chief Editor Vitarkesari, Mithran.

219, Jampettah Street,
COLOMBO-13.
17-7-1986

வேலணை வேணியன் தன் கவிதைகளுக்கு நூல் வடிவம் தரப்போவது கேட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

சிந்தனையைத் தூண்டும் இவர் கவிதைப்பணி தொடரவும், அதில் இவர் முயற்சிகள் வெற்றிபெறவும் என் வாழ்த்துக்கள்.

கே. வி. எஸ். வாஸ்.

---

**THE PRIME MINISTER**

10, Downlng Street,
June, 1983

Thank you for your Message of Congratulation. The historic rusult with its decisive majority has encouraged us all.

We shall now carry on with our work for the People of the United Kingdom Supported and Strengthened by the confidence which has been placed in us.

Sgd: **Margaret Thatcher**

1983ம் ஆண்டு பிரித்தானிய பிரதமருக்குத் தமிழில் தேர்தல் வெற்றிக்காக யான் அனுப்பிய தமிழ் கவிதைக்கு கிடைத்த பதில் மேலே காணப்படுகின்றது.

—வேலணை வேணியன்

# ஆசியுரை

## எம். எஸ். செல்லச்சாமி

பொதுச் செயலாளர்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்
72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை
கொழும்பு—7
25.05.1987

கவிதைத் தாயின் திருவடிகளில் அருட்கவிஞர் வை. கங்கை வேணியன் படைத்திட்ட தெள்ளமுதம் பருக பருகப் பாகாய் இனிப்ப தோடு—ஏடு பூராவும் பெருக்கெடுத்தோடும் அருட் கவிதை மழை, வாசிப்போர் உள்ளத்து கங்கையிலே ஊறிப் பாய்ந்து உணர்வைப் பெருக்குது—பாரீர்! பாரீர்!! " கங்கை பொங்குது " பாரீர் என்று கூவிடுமளவுக்கு ! என்னே கவித்துவம் !

பொன்னேபோல் வளர்க கவிஞரின் முயற்சி !
வாழ்க வேலணை வேணியன் !

எம். எஸ். செல்லச்சாமி

**MEERA SHANKAR**
(Deputy Secretary)

Prime Minister's Office
New Delhi 110.011
11.09.1986

No. PMP-10927

Dear Mr. Kangavenian,

The Prime Minister has asked me thank you for your letter of the 20th August informing him of your new Poem on out late Prime Minister Mrs. Indira Gandhi. He sends you his good wishes.

Yours Sincerely,
(*Sgd.*) **MEERA SHANKAR**

765/407, N.H.S.,
Maligawatta,
Colombo—10
Sri Lanka

# வாழ்க கங்கைவேணியன்!

பிறந்து மொழிபயின்ற கால முதலாகச் செந்தமிழ் அன்னை யின் கடாட்சம் பெற்றவராக அன்பர் கங்கைவேணியன் விளங்கி வருவதை அவர் தொகுத்து வைத்துள்ள பாடற் தொகுப்பின் மூலம் அறியும் வாய்ப்பு ஏற்பட்டது.

இவர் பக்திச் சுவையோடு வாடாமலர்களாகச் செந்தமிழ் அணங்கிற்குச் சூடிய சொன்மாலைகள் அவரது உணர்வின் வெளிப்பாடுகளே. தம்மைச் சுற்றிச் சுழலும் அனைத்தையுமே மனித நேயத்தோடு தரிசிக்கும் பாங்கு அவரிடம் குடி கொண் டிருப்பதைக் கண்டமையினாலே அவரது சந்தக் கவிதைகளை படித்துச் சில குறிப்புகளையும் கூறினேன்.

எனது குறிப்புகளை மனமுவந்து ஏற்றது மட்டுமன்றி இயற்றமிழ் கவிஞராகவும் நிதானமாக வளர முற்படுகின்றார் என்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

" வாழ்க கங்கைவேணியன் தமிழ் பணி "!

—ஆ. சிவநேசச்செல்வன்
(பிரதம ஆசிரியர் வீரகேசரி)

கொழும்பு.
18–8–1986

# அணையா தீபம் அன்னை இந்திரா

அன்பின் உறைவிடமே அறத்தின் மறுபொருளே
தன்னன்பின் தலைவனாய் ராஜீவ்வை ஈன்றெடுத்த
அன்னையவள் இந்திராவோ எம்மணையா தீபமன்றோ
கன்னித்தமிழ் அன்னைதன் காவலாய் திகழ்ந்த தாயே

— வேலணை வேணியன்

(இக்கவிதைக்கு நன்றி பாராட்டி பதில் அனுப்பிய மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ராஜிவ் காந்தி அவர்கட்கு நன்றி)

---

★ எல்லாம் அவன் செயலே ! மக்கள் இன்புற வாழ்வதே இறையருள் விருப்பு.

★ இயேசுபிரான் பேரன்பு பாரெங்கும் பரவட்டும்.

★ புத்தர்பிரான் தர்மவழி புகழோங்கி வளரட்டும்.

★ நபிகள் நாயகம் நற்சிந்தனைகள் நானிலம் சிறக்கவழி செய்யும்.

★ ஒருவருக்கொருவர் அன்பும் சமாதானமும் நிலவ அள வளாவிப் பேசி அல்லல் அகற்றி இன்புற்று வாழ இறை வனைத் துதி செய்வோம் வாரீர்.

★ மாய உலகில் தேடிடும் பெரும் செல்வம் மறு உலகி னிற்குத் தொடர்ந்தும் எம்முடன் வாராது.

★ இப்பிறவியில் தேடும் அருட்செல்வம் இம்மைக்கும் மறு மைக்கும் எம் ஆன்மாவுக்குத் துணை செய்யும் இன்பமே சூழ்க ! எல்லோரும் வாழ்க !!

★ சாந்தி ! சமாதானம் !! நாட்டில் என்றும் நிலை நிற்க உழைத்திடுவோம்.

— வேலணை வேணியன்

# மன்றம் அமைத்திடுவோம்!

கவிஞர் – வை. கங்கைவேணியன் கொழும்பு.

அலைகடல் கடந்தே எங்கணுமே
மலைபோல் தமிழன் வாழ்கின்றான் !
விலைமதிப்பரிய எமது மொழி
விரும்பி எவரும் கற்றிடுவர் !
நிலையிதை நாமும் உயர்த்திடுவோம் !
நீடிய புகழைக் காத்திடுவோம் !
கலைமகள் தேவி கருணையுடன்
கவிஞர்கள் மன்றம் அமைத்திடுவோம் !

இனியவள் எமது தமிழ்அன்னை
என்றும் அவளைக் காத்திடுவோம் !
கனிவுடன் அவள்புகழ் பாடிடுவோம் !
பணிவுடன் அவள்பதம் பணிந்திடுவோம் !
தனிநிகர் தரணியில் தமிழுக்கே—
தமதுயிர் கூடக் கொடுத்திடுவோம் !
பனிபோல் உலகினில் எமதுதுயர்
விலகிட மன்றம் அமைத்திடுவோம் !

பரந்துவாழும் தமிழர்கள் நாம்
பாங்குடன் இணைந்து வாழ்ந்திடுவோம் !
இரந்து வாழும் இனமல்ல—
என்பதை உலகில் பரப்பிடுவோம் !
சிரந்தனைத் தாழ்த்தி வணங்கிநின்றே—
இறைவன் துணையினைக் கேட்டிடுவோம் !
நிரந்தர ஒற்றுமை ஏற்படவே-
நிமலன் பாதம் வணங்கிடுவோம் !

(வேணியன் என்ற புனைபெயரில் வானொலி மற்றும் இதழ்களில் இவரது கவிதைகள் வெளி வந்துள்ளன. சமய தத்துவங்களை நன்குணர்ந்த இப் பாவலர், பல துறைகளில் பயிற்சி பெற்றவர்)

---

"செம்மாங்கனி"

(உலகத் தமிழ் கவிஞர்கள் மன்றக் கவிதை நூலில் இடம் பெற்ற கவிதை)

## மஞ்சமதில் இன்று மானிப்பாய் மருதடி விநாயகன்

உம்மெய்த் திருவடியே தஞ்சமென வந்தோமய்யா
சீர்பெருகு மானிப்பாய் மருதடி விநாயகனே
எம்பவமெல்லாம், தீர இன்று மஞ்சமதில் பவனிவரும்
ஏரோர் பலர் போற்றும் மானிப்பாய் மருதடி விநாயகனே
தம் அடியோர் கசிந்து கண்ணீர் விட்டே கேட்கும் வரமெலாம்
பரிந்து அருள்வாய் மானிப்பாய் மருதடி விநாயகனே.
அம்மையப்பன் துணை கொண்டு அவனி காக்க வருவாயே
அழகாக மஞ்சமதில் மானிப்பாய் மருதடிவிநாயகனே.

**— வேலணை வேணியன்**

வீரகேசரி
06.04.1984

## இன்று பெரிய வெள்ளி

பாரச் சிலுவையிலே இயேசுபிரான்
பதை பதைக்க அறையப்பட்டார்
பாரதனில் எமக்காகத் தன் இன்னுயிரைத்
துறந்த பெரிய வெள்ளி இன்றல்லோ
வாரமிதோ தவமிருந்து அவரை
வணங்கித் தொழுதிடுவோம்
கோரக் கொடுமை யெலாம்
சிலுவையிலே இயேசு பட்டார்
வீரமரணமல்ல அதுவோ வேதனை சூழ்
பாவிகளெமக்கான தியாக மரணமல்லோ
ஆரத்தழுவப்பட்டே இயேசு காட்டப்பெற்றார்
யாரப்பா மறந்திடுவார் இயேசுபட்ட நிந்தனைகள்
அவர் நாமத்தை வாழ்நாளில் யார்மறப்பார்
சூரத்தனமெங்கும் அடக்க சுந்தரர்
இயேசுவை வணங்கி நிற்போம்

**— வை. கங்கைவேணியன்**

தினகரன்
20.04.1984

# துயரக்கண்ணீர் துடைப்பாய் தாயே

இதமான எம் வாழ்வில் இனிதான நல்வரமும்
குணமான அருளும் நல்கும் அன்னை சதாசகாய மாதவே!
நிதமும் உன்குளிரான அருட்பாதங்கள் மறவாது
வணங்கி மகிழ்ந்தெழுமெம் அன்னை சதாசகாய மாதாவே!
மிதமான திமிர்கொண்டு வாழும் மாந்தர் தம் கொடும்
குணம் யாவும் அடக்கும் அன்னை சதாசகாய மாதாவே!

புதன் வாரந்தொறும் உன் பதிநாடி ஓடிவந்தே அழும்
ஏமார்ந்த ஏழைகள் துயரக் கண்ணீர் துடைப்பாய் தாயே

— வை. கங்கைவேணியன்

வீரகேசரி
30.05.1984

# நவாலி அட்டகிரிக் கந்தனே அருள் தாருமய்யா

அட்டதிக்கும் மக்கள் அல்லல் பல அறிந்து என்றும்
அருள் சுரந்தளிக்கும் ஐயனே எம் திருமுருகா !
பட்ட துன்பம் போதுமய்யா நவாலி அட்டகிரி முருகா
இன்றுன் மகாகும்பாபிஷேகம் காணவருமடியர்கள்
''விட்டல்லோ தீரவேண்டும் துன்பம்'' இன்றுன் திருப்பதியில்
கதறிக் கண்ணீர் மல்க நிற்போரைக் காருமய்யா
எட்டவில்லையா இன்னும் எம்பிடும்பை உன்செவிக்கு
நவாலி அட்டகிரிக் கந்தனே அருள்தாருமய்யா

— வை. கங்கைவேணியன்

வீரகேசரி
13.07.1984

## மாவிட்டபுர பதிமேவு மணாளனே முருகா

இருள் சூழ்ந்த நேரம் எம்முன்னே நீயே தோன்றி
இதமாக இன்னல்பல களைந்தெறிய வருவாய் திருமுருகா
அருள்வேண்டி அழுதுதொழும் அடியார் எம்பால் இரங்கி
உன்கருணை மழை பொழிய இது தருணம் மயிலேறி
வருவாய்
திருவுஞ்சேர் மாவிட்டபுரப்பதிமேவு மணவாளனே முருகா
கொஞ்சும் சலங்கையுடன் ஓடோடி நீயும் வரவேண்டும்
குமரா!
தருவாய் உன்தண்ணருள் இதுதருணம் எமக்கேநீ யும்
அருள்சேர் மாவிட்டபுரமேவு அபயகர அருள் முருகா !

— வை. கங்கைவேணியன்

வீரகேசரி
27.07.1984

## கதிரமலைப் பாலா ஓடி நீ வந்திடுவாய்

அள்ளி உனை அணைத்திடவே என்ஆசை துடிக்குதய்யா முருகா
வள்ளிக்குகந்தவனே முருகா சொல்லு கதிர மலைக்கரசே குமரா
புள்ளிமயிலேறி எம்முன் விரைவாய் வந்து
புத்துயிரளித்திடுவாய்
வள்ளல் முருகோனே வழியின்றித் தவிக்கின்றோம் குமரா
மெள்ள வந்தல்லோ உன்முகத்தை வருடி முத்தமிட ஆவல்
சுள்ளிப் பயல் நீயும் துரிதமாய் வந்து அருள் செய்வாய்
கள்ளப்பயல் நீயும் தினைபுலத்தில் வள்ளியை மணந்திட்டாய்
தெள்ளமுதே முருகா கதிரமலைப் பாலா ஓடி 'நீ வந்திடுவாய்

— வேலணை வேணியன்

வீரகேசரி
28.7.1984

## நல்லைக் குமரனே மயிலேறிப் பறந்து மஞ்சமதில் வாருமய்யா

நல்லைநகர் நாவலரின் காவலனே நல்லூர்க்கந்தா
நற்கருணை செய்யத் தக்கதோர் துணை செய்வாய்
வல்லபிரான் நல் மைந்தா நல்லூர் குமரையா
வெற்றிவேலுடனே உனைக்காண ஆசை துடிக்குதய்யா
அல்லல்படும் எமக்கு உன்ஆறுதலும் நீ அளிப்பாய்
கல்லையொத்த மனமுருக கருணைசெய் முருகய்யா
இல்லை என்று கூருது எமக்கருள்செய் முருகய்யா
நல்லைக் குமரோனே மயிலேறிப்பறந்து மஞ்சமதில்
வாருமய்யா

— **வேலணை வேணியன்**

வீரகேசரி
11.8.1984

## பறந்துகொண்டே சாமிகும்பிட்ட பக்தர்

திருச்செந்தூர் 1969 செப்டம்பர் 7 திருச்செந்தூர் கோவிலில் ஆவணி திருவிழா நடத்து வருகிறது. இங்கு இலங்கை வாசியான ஒருவர் தனது குடும்பத்துடன் வந்தார்.

அவர் கோவில் முன்பு உள்ள சண்முகவிலாசம் என்றஇடத்தில் தனது முதுகில் 4 இடத்தில் பெரிய வெள்ளி தூண்டிலைக் குத்தி அதிலிருந்து கயிற்றைக் கட்டி சுமார் 10 அடி உயர முள்ளகம்பில் கட்டிப்பறவையைப்போல் 2மணி நேரம் பறந்து கொண்டும், தொங்கிக் கொண்டும் சாமிகும்பிட்டார். இதை '' பறவை காவடி '' என்று கூறுகிருர்கள் இவர் இத்துடன் இம்மாதிரி 6 கோவில்களில் செய்துள்ளாராம்

இதை ஆயிரக் கணக்கான பக்தர்கள் பார்த்தார்கள்.

**செய்தி மாலை முரசு**

நன்றி மாலை முரசு
**வேலணை வேணியன்**

# இயேசு சந்திக்கிறார்!

## நினைத்தவை கிடைக்கின்றது!

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! ஸ்தோத்திரம்! ஸ்தோத்திரம்!
தேவனுக்கு ! நன்றி நன்றி! நன்றி !

1. வாடும் உள்ளங்களே வாரீர் தேவனிடம்
நாடும் இன்பமெல்லாம் நாதன் தந்தருள்வார்
காடும் மலைகளும் தேடியலைய வேண்டாம்
பாடுகள் பட்டவர் பக்கத்தில் வந்திடுவார் (வாடும்)

2. கூடி மகிழ்வாகத் தேவனைக் கூவியழைப்போமே
நாடி அவனருளை நயந்து நாம் கேட்போமே
தேடித் திரியவேண்டாம் அவன்புகழ் பாடிக்கேட்போமே
பாடி மகிழ்ந்தழைத்தால் பாங்காய் அருள்சொரிவார்
(வாடும்)

3. ஆறடி மண்ணுக்குள்ளே அடங்கும் நம்முடம்பும்
கூறமுடியாத பல குமுறல்கள் தனைக்கொண்டும்
தேறமுடியாத தீராமனப்பிணிக் கொடுமை இதுவாகும்
ஆற அமர்ந்து தேவனருள் மருந்தைக் கேட்டிடுவோம்
(வாடும்)

4. விடுதலை எம்மவர் வேதவாக்கினில் காண்போம்
படுதுயர் இதைப் படித்துமே மகிழ்வோம்
வடுவிலா வாழ்வுமே உயரநாம் துதிப்போம்
சுடுபடும் பாவங்கள் நிட்சயம் அறிவோம்
(வாடும்)

✸ வாடிய உள்ளமா ? வருந்த வேண்டாம் !
✸ இறைவனைத் தேட வேண்டாம் அவர் எம் நல்லஉள்ளத்தில் குடிகொண்டுள்ளார்

கர்த்தர்தாசன்
வேலணை வேணியன்

# பிஸ்மில்லா ஹிர் றஹ்மா நிர் றஹீம்

- ✱ அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனு மாகிய அல்லாஹவின் திருப் பெயரை மதிக்கின்றேன்.

- ✱ —அனைத்தையும் ஆள்பவனும், பரிசுத்தனுமான அவனைத் துதித்துப் போற்றுகிறேன்.

- ✱ இரக்க முடையவனும், (கருணை யானவனுமான) அவனைத் துதித்துப் போற்றுகிறேன்

- ✱ —வல்லமை மிக்கவனும், வாக்கை நிறைவேற்று பவனு மான அவனைத் துதித்துப் போற்றுகிறேன்

— வேலணை வேணியன்

# கௌதம புத்தர்

கௌதம புத்தர் பெருமான் வழிநின்று அவர்தம் அடிச்சுவட் டில் மரணம் நிட்சமென்பதை அறிந்து எம் வாழ்நாளில் தர்மத்தைப் பெரிதாக மதித்து நாட்டின் சமாதானத்துக்கும், மக்கள் சகோதர தத்துவ, ஒற்றுமைக்கும் இறைவனை வணங்கி ஒரே இறைவன் என்ற பாதையில் மதங்கள் அனைத்தையு ம் மக்கள் அனைவரையும் மதித்து மோட்ச இன்பம் பெறு வோமாக.

— வேலணை வேணியன்

# விரைந்தோடி வாராய்

எல்லாரும் இந்நாட்டு மன்னர்
என்றே கொட்டுவோம் முரசு
இல்லாமை ஒழிந்திட நாளும்
எம்கடமை செய்வோம் பாரில்

அன்னை தமிழையே நாமும்
அரசோச்ச வைப்போமே பாரில்
விடுதலை வீரராய் திகழ
விரதம் இருப்போம் வாரீர்

கப்பலை ஓட்டிய ஜாதி நாம்
கைகட்டி நிற்கவே மாட்டோம்
இப்புவி தன்னிலே நாமும்
இனித்த பதவியை வகுப்போம்

ஆயிரம் தெய்வங்கள் வணங்கி
அடைவோமே சுகமுமே நாமும்
தாயினும் சிறந்த தமிழே!
தரணியில் எம்துணைத் தெய்வம்

மாய வலைக்காரர் நம்மை
வாழ வழிவிடார் நம்பு
ஆய் கலைகளைக் கற்றே
அறிவுச் சுதந்திரம் பெறுவோம்

தெய்வம் ஒன்றென்று நம்பு
உய்யும் வழியது ஒன்றே
கல்லும் கவிபாடும் தமிழை
காக்க விரைந்தோடி வாராய்

— வேலணை வேணியன்

# தந்தையை வணங்கி தமிழையும் வளர்ப்போம்

எந்தையே செல்வா இணையிலாத்தலைவா
நிந்தையே எமக்கென நீயுமோ பட்டாய்
தந்தையே அகிம்சையின் அன்புடைத் தலைவா
எந்தையே உலகினில் உனை இனி மறவோம்

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை
தமிழினிற் கொப்ப மொழி எதுவுமில்லை
சிந்தையும் அன்னையின் சிறப்பது காணவே
நிந்தனை எத்தனை எமைநாடி வரினும்

எத்தனை தலைகள் முறையதாய் ஓடினும்
அத்தனை துணைகள் அரணது அமைக்க
இத்தனை கடந்தும் இன்பமே இல்லை
அத்தனை வணங்கியே அடைவோம் இன்பம்

தந்தையை வணங்கித் தமிழையும் வளர்ப்போம்
எந்தையும் காட்டிய வழியது அகிம்சை
விந்தையே பாரினில் வியப்புறு வன்செயல்
மந்தையோ நாமும் மயக்க முற்றோர்க்கும்

— வேலணை வேணியன்

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(இவர் பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களை ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

# தந்தை செல்வா

தலைமுறை தானும் மறக்காத
தனிப்பெரும் தலைவர் எம்தந்தை
இனிய எமது அன்னைக்கு இவர்
என்றோ ஜாதகம் எழுதி விட்டார்
வனிதையர் கண்ணீர் வடித்திடுவர்
வரும் சந்ததி தானும் அழிவுறுமே
வாடிவதங்கி நம் இனமே—என்றும்
வடித்திடும் கண்ணீர் தம்பியரே !
என்றே வாய்மை உரைத்த பேராளன்
அன்றே கூறிமுடித்தான் தந்தை செல்வா!

முற்ற வெளிதனில் கூட்டம் என்றால்
அன்று முண்டி அடித்து ஓடுவோம்
சற்றும் பெலமில்லா மெலிந்த உரு
கயிற்றை பற்றியே ஏறும் மேடையிலே
ஒற்றர் படையும் பார்த்து நிற்க—மக்கள்
ஓங்கிடும் தொனியில் கைதட்ட
சற்றுமே விளங்கா தன் குரலில்
தனிபெரும் தலைவர் தந்தை செல்வா
வீர முழக்கம் செய்திடுவார்!

எத்தனை தியாகம் அவர் செய்தார்
அதை என்றும் மறவோம் வாழ்வினிலே
நற்றமிழ் வளர்க்க நாளெல்லாம்
நலமே என்றும் பாடுபட்டார்
உற்ற துணையின்று எமக்கெவருமில்லை
உயிர் பிச்சை கேட்கும் நாளாச்சே
அச்சாணியாக எமக்கிருந்த மகான்
அகிம்சையின் இலக்கண வடிவமல்லோ
துச்சாதனன் துகில் உரிந்தகதை
மச்சானுனை நினைவு வருகிதடா
எச்சாவு வந்தாலும் இனியென்ன
என ஏங்கித் தவிக்கும் வாழ்விதுவே
அச்சாகப் பதிந்து நிற்குதடா
அன்று தந்தை யருளிய வாக்கியமே
செத்தாலும் மறவோம் வாழ்வினிலே
தந்தை செல்வா காட்டிய வழிதனையே

!— அரவணிந்தான்

## காத்தருள் மருதமடுப் பதிமேவு மாதாவே

தொழுதிடுஅடியார் இடர்பல தீர்க்கும் மருத மடுவாளே
அன்னையே உனை அன்பில் அழுது வணங்குகின்றோம்
அழுதிடும் அடியார் அல்லலை நீக்க அருகினில் வாராயோ
அம்மா
பின்னை எம் வினை தனை நீக்க வல்ல பெருந்தாய் நீயல்லோ
மெழுகு திரிக்கென ஒப்ப மேதினி வாழும் மாந்தரை என்றும்
காத்தருள் மாதாவே எங்கள் மருதமடுத் தாயாரே
வாராய்
பழுதிலா நீதி பரிவுடன் நிலவப் பரிந்து நீயருள் சொரிவாய்
இனமத நிலைதனைக் காத்தருள் மருதமடுப் பதிமேவு
மாதாவே

— வை. கங்கைவேணியன்

வீரகேசரி
15.8.1984

## தர்மத்தின் அன்னை திரேசாவே வருக!

வெண்பா

தக்க தருணமதில் எம்தரணிதனில் இன இன்னலும்
மிக்க வறியோர் துயரும் நீங்கிட—அம்மையே
திக்கற்ற ஏழைகட்கு தெய்வீகநற் தடாகத்தாயே
எக்கணமும் மறக்காவொண்ணு அன்னை திரேசாவேவாழ்க!

விருத்தம்

உலகோர் போற்றித்தொழும் எம்அன்னையே
வறியோர்பிணி போக்கும் அற்புதத்தாயே வாழ்க!
நலமே என்றும் நம்மக்கள் வறுமைப்பேயை விரட்டிடவே
இல்லமதனை புனித அன்னம்மாள் தலமுடன் இணைத்தாய்!
நிலமிசை மக்கள் நீடுபோற்றிட திறந்தே அருளுக அன்னையே
என்றும் மறவோம் இம்மாநிலம் போற்றிடுமினிதே
பலரும் போற்ற தர்மத்தின் அன்னை திரேசாவே வருக!
பாரோர் போற்ற வாழிபல்லாண்டு! பல்லாண்டு!

— வேலணை வேணியன்

வீரகேசரி
6.9.1984

# நல்லைக்குமரா வாருமய்யா
# நலிந்த எம்மைக் காருமய்யா

முக்கண்ணன் இளையமைந்தா தொல் புகழ்சேர் நல்லூர்கந்தா
எக்கணமும் உனைத்துதித்தோம் வேலப்பா—அரக்கர் இனம்
இக்கணமே உன்வேல் மகிமை அறியவைக்கும் திறலோனே
சிக்கனவே பிடித்தோமுன்னை சிந்தித்துச் செயற்படப்பா

விருத்தம்

முல்லைக்குத் தேர்கொடுத்த பாரிவள்ளல் இன்றில்லை
உன்னடியார் கண்ணீருக்கு என்னபதில் நல்லைக்கந்தா?
தில்லையிலாடும் பெருமானும் தன் திருவிளையாட்டெனவே
எண்ணி

எம்மிடும்மை கண்டு இன்புறுகிறார் எம் நல்லைக் கந்தா
எல்லையில்லாவெம் துன்பத்துக்குத் துணை நீயேதான்
மருந்தப்பா

என்றே யோகரும் அன்றே நன்றே கூறிவைத்தார்
சொல்லின் செல்வர் நாவலரும் தூயதமிழை வளர்ந்ததுன்
பதியில்

நல்லைக் குமரா வாருமய்யா நலிந்த எம்மைக் காருமய்யா

— வேலணை வேணியன்

தினகரன் வாரமலர்
19.8.1984

# திருவெம்பாவை ஓதி மகிழ்வோம்

ஆதியும் அந்தமுமில்லா அரும் பொருள்
வேதிகர் போற்றிடும் விண்ணகத்தலைவனே
பீதியெனும் எம்மிடைப் பீதிகள் நீங்கிடவே
சோதியே இறைவனே அருள்வாய் எமக்கு
வீதிதோறும் உன்நாமமும் உன்னித் துதித்தே
ஓதியே திருவெம்பாவை உவந்து மகிழ்வோம்
மோதிடும் மனக்கலக்கமும் பீடையும் தீரவேயென
பாதிமதி நதியுமே சூடிய நம் பெருமானே
கோதியே முடித்த நீள்திரிசடையுடை ஈசனே
சூதிலாப் பாவிகள் துயர்களும் நீங்கிவிட
வேதிகா அருள்வாய் தேவர்கோனே சிவபெருமானே
சாதிமத பீடைகள் நீங்கியநற் சமாதானமே!

— வை. கங்கைவேணியன்

28.12.84
வீரகேசரி

மணிவிழாக் கண்ட

# தெல்லியூர் பெற்ற செல்வ மகளே!

தெல்லியூர் பெற்ற செல்வமகளே வித்தகியே
எல்லையில்லாது உலகளாவத் தமிழ் வளர்ந்து — என்றும்
நல்லையிலும் தமிழ் முழக்கம் செய்து உயர்வு கண்ட
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்க!

உலகெலாம் தமிழ் இனிமை பரப்பி
நிலமிசை மாந்தர் போற்ற—நன்றே
திலகமாய் அன்னை தமிழுக்குத் திகழ்ந்து
குலமகளாய் செல்வியே பல்லாண்டு வாழ்க !

— வை. கங்கைவேணியன்

(வீரகேசரி)

# புத்தாண்டு பொங்கி மிளிரட்டும்

புத்தாண்டு பொங்கி மிளிர வேண்டும்
வித்தாகச் சமாதானப் புருக்கள் பறக்கவும்
சித்தாந்தம் மறுபுறமாய்பேசுவோர் மௌனம்
முத்தான புதுப்பொலிவு நாம் காண வழி!

— வை. கங்கைவேணியன்

(வீரகேசரி 1985 புத்தாண்டு மலர்)
1.1.1985

# இன்று மருதடி விநாயகர் மஞ்சத் திருவிழா

வஞ்சமிலாச் சமுதாயம் வாடி மிகநொந்து
துஞ்சி மடிந்திடவும் துணிந்து இன்னும்
மஞ்சமதில் ஏறிவரும் மருதடி விநாயகனே
தஞ்சம் நீயெனத் துதிக்கின்ரேம் கணபதியே
பஞ்சம் பிணி தொல்லேகள் எமக்கும்
அஞ்சி வாழ்கின்ரேம் தரணிதனில் ஐயா
மஞ்சமதில் உனேக்காணத் துடிக்கின்ரேம்
கெஞ்சுகிரேம் உன்னருளே மருதடி விநாயகனே!

வை. கங்கைவேணியன்

வீரகேசரி
6.4.1985

## தெல்லிப்பழை
## பதிமேவு ஸ்ரீ துர்க்காதேவியே சரணமம்மா

எல்லையில்லா எம்மிடும்பைகள் களைந்தெறியவல்லவள் தேவி
தொல்லைகளின்று நீங்கிடவே நாம் துதிசெய்வோம் அம்பிகையை
சொல்லமுடியாத துயரெலாம் அவளறிவாள் துணை நிற்பாள்
முல்லை மலர்தனைத் தொடுத்து சூட்டியவள் பதம் துதித்திடுவோம்
தில்லையிலாடும் பெருமானும் தன் திருமுகத்தே புன்முறுவல் காட்டி
நல்லதமிழ் தன் திருச்செவி இனிதே மாந்தவுமன்றோ தென் திசைநோக்கி
கல்லையொத்த இன மனமதுருகிடத் திருநடமாடுகின்றார் அம்மையே
தெல்லிப்பழை பதிமேவிவளர் ஸ்ரீ துர்க்காதேவியே சரணமம்மா

— வை. கங்கைவேணியன்

வீரகேசரி
31.8.1984

## சிக்கெனவே பிடித்துனது செங்கமலத் தாழ் பணிவோம்

எக்காலமும் எமைக்காக்கும் அன்னைவேளாங்கண்ணியே
தக்கதருணமதில் தமியேம் துயர்களையத் துதிக்கின்றோம்
மிக்கபுகழ்சேர் செக்கடிதெருமேவும் அருளமுதே
மக்கள்படும் வேதனையை வந்தொருகால் பாராயோ
பக்கபலமாகிப் பாவமெலாம் பொடி செய்வாய்
சிக்கெனவே பிடித்துனது செங்கமலத்தாழ் பணிவோம்

— வை. கங்கைவேணியன்

வீரகேசரி வாரமலர்
9.9.1984

# நல்லைக்குமரா வாருமய்யா
# நலிந்த எம்மைக் காருமய்யா

முக்கண்ணன் இளையமைந்தா தொல் புகழ்சேர் நல்லூர் கந்தா
எக்கணமும் உனைத்துதித்தோம் எம் வேலப்பா—அரக்கவினம்
இக்கணமே உன் வேல் மகிமை அறியவைப்பாய் பெரு
வேலய்யா
சிக்கெனவே பிடித்தோமுன்னை சிந்தித்துச் செயல்புரிவாய்

விருத்தம்

முல்லைக்குத் தேர்கொடுத்த பாரிவள்ளல் இன்றிங்கில்லை
உன்னடியார் கண்ணீருக்கு என்னபதில் நல்லூர்கந்தா
தில்லையிலாடும் பெருமானும் தன் திருவிளையாட்டெனவே
என்னுகின்ருர்
எல்லையில் நின்றெம்மைக் காத்தருள்வாய் நல்லைப்பெரு
மானே
கல்லையொத்த மனமுருக முருகா உன்கருணை அருளே
வேண்டுமப்பா
நல்லயோக சுவாமிகளும் அன்றே இதனைக் கூறிவிட்டார்
சொல்லின் செல்வர் நாவலரும் துணிந்து தூயதமிழை வளர்த்
ததுன் பதியில்
நல்லைக்குமரா வாருமய்யா நலிந்த எம்மைக் காருமய்யா

— வை. கங்கைவேணியன்

வீரகேசரி
2.8.1984

## சேர். பொன். அருணாசலம் பிறந்த நாள் இன்று

பாரோர் போற்ற மாமேதையென நீடு வாழ்ந்த உத்தமரே !
சீரோன் சேர். பொன் அருணாசலம் பிறந்த நாளின்று !
யாரோ செய்த பாவத்திற்குக் கண்ணீர் சிந்தித் துடிக்கின்றோம்
நீரோ எமக்குத் தஞ்சமென இருந்த நாளுமொன்றுண்டு !
ஊரோரின்றும் போற்றுகின்ற உத்தமரே நீர் விண்ணில்
வாழ்கஎன்று
போரோதானும் வாய்வீச்சால் சுதந்திரமும் பெற முன்னின்றீர்
ஈரோ தலையில் இரத்தம் குடிப்பதுபோல் எம்தன் மானம்
துடிக்கிறது!
மோரோதானே காலனுக்கும் உத்தமர் வாழ்வை பறித்திடவே!

— வேலணை வேணியன்

வீரகேசரி
14.9.1984

# பேரறிஞர் திலகம்

கண்ணா எம் கவலையெல்லாம் தீர்ப்பவனே துணை நீயே
அண்ணா அறிஞர் திலகம் இன்று பிறந்த நாள் அன்றோ
மண்ணே போற்ற வாழ்ந்த தமிழக மாமேதை
விண்ணே அதிரப் பேசும் மொழிப் பற்றுடையோன்
கண்ணே மணியே எனக் கண்கலங்கி நிற்கின்றோம்
பண்ணே இழந்த நரம்பறுந்த வீணையதுபோல் நாமும்
அண்ணா ! அண்ணா ! என உமை நினைந்து அலறுகிறோம்
விண்ணோர் போற்ற இனமுழக்கம் செய்தே மகிழ்ந்திடுவீர்

— வேலணை வேணியன்

வீரகேசரி
15.9.1984

# இன்று நவராத்திரி
# இரத ஆரம்பம்

### வரலஷ்மி

செய்தொழில்கள் சிறப்புற்றுச் சிறப்புடனே வாழ்ந்திடவும்
மெய் வருந்திக் கேட்கின்றோம் வரலஷ்மி—என்றும்
உய்யவரம் தந்தருள்வாய் உவகையுடன்வாழ நன்கு
தெய்வ வழியே இனியென்றும் துணை நீயே !

— வை. கங்கைவேணியன்

வீரகேசரி
25.9.1984

## துர்க்காதேவி

ஆரத்தழுவி அன்புடனே நாம்வேண்டும் வரமனைத்தும்
வீரத்தாயே துர்க்காதேவி தந்தருள்வாய்—என்றும்
பாரத்தலைச் சுமையில்லாது துன்பங்கள் விலகிடவும்
கோரப்புயல் அடக்கியருள் துணை நீயே !

## சரஸ்வதி

மாணவர்கள் இடும்பையின்றி மா நிலத்தில் வாழ்ந்திடவும்
ஆணவப்பிடி நீங்கியம்மா சரஸ்வதியே—நன்றே
காணத்துடிக்கும் நற்கரையைக் காட்டியருள் தாயே
நாணமின்றி நாவிற்குடி நின்று துணை நீயே

— வை. கங்கைவேணியன்

வீரகேசரி
28.9.1984

# தேச பிதா டி. எஸ்.
## 100வது நினைவு தினம்

இனஜன பேதமின்றி எம்தேசபிதா டி. எஸ்
தனது வாழ் நாளில் தமிழ் தலைவர்களுடன் தானிணைந்து''
மனதாரப் பெற்ற சுதந்திரம் ! இனிதாக எல்லோரும்
இத்தினமான தேசபிதா நூற்றுண்டை வாழ்த்திடுவோம் !

— வை. கங்கைவேணியன்

20.10.1984
வீரகேசரி

# அமைதித் திருநாள்

இனிதெங்கும் கொண்டாடும் திருநாள் இன்று
பனிபோல எம் துன்பம் விலகிட அருள்வாய்
தனி வழிக்கும் தருணமதில் அருள்புரியும் முருகா
இனிதாகத் தீபாவளியை அமைதியுடன் தொழுது
கனிவாகவெம் இன இன்னலும் உன் அருளால்
சனிதிசையுமாற எமக்கு அருள்வாய் சிவனே
தனிவடிவேலா கண்ணில் நீர்மல்க பாவிகள் நாம்
மனிதராகத் தரணிதனில் வாழத் துதிக்கின்றோம் !

— வை. கங்கைவேணியன்

தினகரன்
23.10.1984

# இயேசுவே வாருமய்யா

மண் ணுலகு போற்ற மனுக்குலத்தில் அவதரித்து
எண்ணிலடங்கா இவ்வுலக மாந்தர்தாம்—தெய்வமென
விண்ணகத்தரசிதன் அற்புதப் புதல்வாவெனப் போற்றும்
கண்மணி எங்கள் இயேசுவே வாருமய்யா

— வை. கங்கைவேணியன்

25.12.1984
கிறிஸ்மஸ்மலர்
வீரகேசரி

# சித்தம் மகிழக் கொண்டாடிடுவோம்

பாலன் இயேசு பிறந்தனனே !
பாவிகள் எம்மை இரட்சிக்க !
பாடுகள் பலதும் பட்டனனே !
பரிவுடன் சிலுவை சுமந்தனனே !
பதைத்திட அடியும் பெற்றனனே !
பாரிய சிலுவை தன்னுடனே !
நிலத்தினில் வீழ்ந்து புரண்டனனே !
நிந்தனை எத்தனை பெற்றனனே !
மதத்திமிர் கொண்ட யூதர்களோ !
அறைந்தனர் இயேசுவை சிலுவையிலே !
நமக்கென மரித்த பாலனையே !
நிலமிசை வேண்டி வணங்கிடுவோம் !
சிறுப்புடன் தானும் நத்தாரும் !
திறக்குமோ வழியும் எம்தனுக்கு !
சித்தம் மகிழக் கொண்டாடிடுவோம் !
சீராய் நாமும் வாழ்ந்திடவே !

— வேலணை வேணியன்

வீரகேசரி
(25.12.1986)

# வருக நற்புத்தாண்டே

ஊரெல்லாம் உவகை பெறவே வாழ்த்தி
பாரெல்லாம் பல்லினமும் பாங்காக வாழ்ந்திடவே !
போரெல்லாம் முடிவுகண்டு புன்முறுவல் பொங்க !
சீரெல்லாம் பெருகிட வருக நற்புத்தாண்டே !

புதுப்பொலிவு பெறவேண்டும் பூவுலகில் மாந்தர் !
அதுக்குனையே வணங்கிறோம் புத்தாண்டே வருக!
புதுக்கவிதை மாலைகளோ பலவின்று உனக்கே !
இதுக்கெமக்கு எதுதருவாய் இனிய புத்தாண்டே !

— அரவணிந்தான்

வீரகேசரி
1.1.1987

# இன்று கந்த ஷஷ்டி !
# அருள் தாராய் அப்பா !

விந்தைமிகு உலகினிலே வேதனையும் சோதனையும்
எந்தைஇள முருகோனே எவர்க்கோ கூறுவது ?
சிந்தையும் கலங்குதையா சீரில்லா வாழ்வதனுல்
கந்த ஷஷ்டி விரதமதில் காண்போமா நாம் விடிவு ?
நொந்தவெம் மனமோ கலங்கித் துடிக்கிறது
சொந்தபுத்தி தடுமாறி துன்பத்தில் முடிகிறது
மந்தநிலை மாறி மனநிம்மதியும் வேண்டியல்லோ !
கந்தா உனை வணங்கி துதிக்கின்றோம் துயர்தீர
உந்தன் அருள் தாராய் நீல மயில் வாகனனே !

— பனித்த சடையான்

வீரகேசரி
2.11.1986

## திருவருள் தருவாய்
# புனித அந்தோனியாரே

உன்பதி வந்தேதானும் உருகியே மனமும்
ஓலமிட்டு அழுதிடும் ஓசை கேளாய் !
நின் செவிமடுக்காதோ புனித அந்தோனியாரே !
இதற்கு நீ நற்பதிலுமே கூறுமப்பா !
வன்முறை அடக்கவல்ல நாயகன் நீயேயப்பா !
வழிந்தோடும் எம் கண்ணீரும் கண்டே !
தென்பெல்லாம் குறைந்தேதானும் திகைக்கின்றோம் !
திருவருள் தருவாய் புனித அந்தோனியாரே !

— **வேலணை வேணியன்**

**வீரகேசரி**
3.6.1985

# அருள் தருவாய் தாயே

நாகமது குடைபிடிக்கும் அன்னை நாகேஸ்வரியே !
தாகமது தாங்காது இடும்பையினுல் உன்னடியார்
வேகமதாய் வந்திடுவார் நயினை நோக்கியே !
சோகமெலாம் நீயறிவாய் துரிதவருள் தருவாய்தாயே !

— **வேலணை வேணியன்**

**வீரகேசரி**
2.7.1985

## மயிலேறி வாராயோ வேலவனே

எந்தனின் இடும்பையெலாம் இனிதாக எளிதினிலே !
கந்தனவன் தீர்த்திடனே கந்தஷஷ்டி விரதமதில் !
நொந்தவன் துயர்தீர்க்க மயிலேறி வாராயோ !
சிந்தனையும் சிறப்பாகச் செயற்படவே வேலவனே !

13.11.1985
வீரகேசரி

— வேலணை வேணியன்

வீரகேசரி
13.11.1985

**கவிதை முத்துக்கள்**

## இறைவன் எங்கே ?

எங்கும் தேடவேண்டாம் !
இருக்கும் இடமோ !
இன்ப இதயத்தில் !
இதற்கேன் காணிக்கை ?
அவர் அதைக்கேட்கவில்லை !
துன்பம் மிகுந்தாலும்
துயரமது வாட்டினுலும்
இன்பம் மிகுந்தாலும்
இனப்பூசல் வந்தாலும்
இறைவன் துணையே !
என்றும் கைவிடார்
வாக்கோ மாருதவர்
வல்லமை அவர் கையினிலே
ஆகமம் கூறுவதும்
அந்தத் தத்துவமே
தேவனைக் காணுங்கள்
எம் தெளிவான
தூய உள்ளத்தே
அனைத்தும் உலகதனில்
ஆண்டவன் செயலே
6.10.1985
வீரகேசரி

— வேலணை வேணியன்

# என்ன பொங்கல் ?

இன்றெம்முன் மலர்கிறதே பொங்கலென்று !
   உணர்வேதும் இல்லாது விரக்தியுந்த
முன்றலிலே பொங்குவதால் என்ன ஆகும் !
   முடிவற்ற சோகம் தான் எச்சமாகும்
என்றென்றும் அழிவோடும் அவலத்தோடும் !
   ஏழ்மைதான் கனவாகி ஏங்கலானோம்
நன்ருென்றும் காணுது நலிவடையும் நாளாச்சே
   நரகமே வாழ்க்கையென அமைந்துபோச்சே

— வேலணை வேணியன்

1986 பொங்கல் திருநாள்
வீரகேசரி

## மாளிகாவத்தைப் போதிராஜ பதிமேவு
# மாகாளித்தாயே

வல்ல கிருஷ்ணன் சுவாமி வணங்கி மகிழ்ந்தருளும்
சொல்லவொண்ணு துயர்துடைக்கும் தூயவளே மாகாளி !
நல்லபோதிராஜ மாளிகாவத்தை பதிமேவியருள் தாயே !
பல்லோரும் உன்பதிநாடி ஓடி வந்தே பிணி நீங்கி
செல்லக்கண்டே என்னுள்ளம் உவகை கொண்டதம்மா !
கல்லையொத்த மனிதர் மனம்மாறி மகிழ்ந்திட அருள்நல்கி
தொல்லையல்லாப் புகழோங்கி வாழ வழி வகுத்திடுவாய் !
நல்லவளே தாயே நாளும் உனைமறவேன் நான்

— வேலணை வேணியன்

## பாரதியார்

வானைப் பிடித்திடும் அளவுக்கு—அன்று
வடித்தனன் கவிதைகள் பாரதியே
ஊனை சதமென மதித்தனனே—அவன்
உறக்கமில்லாது கவி பாடினனே
தேனைப்போல் கவி பாடியுமே—எம்
தெள்ளுதமிழ் நன்கு வளர்த்தனனே
ஈனக் கொடுமைகள் நீங்கிடவே—அவன்
இனிய விடுதலை கேட்டனனே
வறுமைப் பிணிதனில் கவிபாடி—நன்கு
வளர்த்தனன் தமிழை உலகெங்கும்
பொங்கிடும் கங்கை அவன்கவிதான்
புவி என்றும் மறவா பாரதியே

## கவிஞர் கண்ணதாசன்

எண்ணத்தில் இனியன் எழுத்தில் கவிஞன்
மண்ணகத்தில் மாந்தர் மதித்த மாமேதை
கண்ணனே அவன் கவியில் கதாநாயகன்
கருத்தெல்லாம் அவன் கருத்தே முற்றும்
காதல் கவிபாடின் கடலாகத் தமிழ்
கண்ணதாசனுக்கு வருமென்றால் வியப்பில்லை
எம் மதமும் சம்மதமென நின்றானன்றோ
இனிய நற்றமிழில் இயேசு காவியம்
பிபிலிய நூலை வென்றிட வடித்தனன்
தனிநிகர் தரணியில் தமிழுக் கென்றனன்
தன் பெலனெல்லாம் தமிழே என்றனன்
கன்னித் தமிழன்னை கவலைகள் எல்லாம்
பின்னிப் பிணைந்தே கவியில் வடித்தனன்
அன்னைக் கருந்துணை அவன் கவியென்றும்
என்னைக் கவர்ந்த ஈடில்லா கவிஞன்
எளில் கொஞ்சும் தமிழில் கவியும் தந்தனன்
காதல் கவிபல வடித்த கண்ணதாசன்
உயிரே ஈய்ந்தனன் எம் தமிழுக்குரமாய்
நாமும் இம்மண்ணில் உரமாய் மாறியே
உயிர் நேர் தமிழைக் காப்போமென்றும் !

— வேலணை வேணியன்

## அகிம்சை அண்ணல் காந்தி

அன்பு அகிம்சை அண்ணல் அருள்வாக்கு
தன்பால் உலகையே ஈர்த்த காந்தியண்ணல்
பொன்போல் உயிரை நீத்தார் விடுதலைக்காய்
நின்பால் வைத்த அன்பென்றும் அகலாதே

— வேலணை வேணியன்

## கண்ணன்

கண்ணண் எங்கள் கண்ணன்—அவன்
கருணை கொண்ட கண்ணன்
மண்ணில் மாந்தர் வணங்கும்—நல்ல
மாயக் கோலக் கண்ணன்

நீல நிறக் கண்ணன்—அவன்
நித்தம் மாயக் கள்ளன்
பாலைத் திருடிக் குடிப்பான்—அவன்
பருகிப் பின்னர் மறைவான்

வெண்ணை திருடும் கண்ணன் அவன்
வீரச் செயலோ கொள்ளை
எண்ணம் நல்லாய் அமைந்தால்—அவன்
எம்மைக்கார்க்கும் தெய்வம்.

— வேலணை வேணியன்

## கிளியின் விடுதலைப்பா

காட்டில் சுதந்திர பட்சி நானும்—இன்று
வீட்டில் அடைப்பட்டு மிக வாடுகிறேன்
ஏட்டில் கிளியென எனை வரைந்தே—இந்த
ஈன உலகும் நன்கு மதித்திடுமே
ஊட்டி வளர்த்த அன்னை இல்லை—அவள்
கூட்டில் அடைப்பட்டுச் சிறையானாள்
நாட்டில் சுதந்திர சிறு பட்சியாக—நான்
பறந்தடிக்க வேண்டும் சுதந்திரமாய்
கோட்டான் குருவி போல் பறந்தடிக்க—ஐயா
கும்பிட்டேன் எனக்கும் விடுதலை தா !

— வேலணை வேணியன்

## நீயருள்வாய் தாயே!

### துர்க்கை

தூயவளே துர்க்கையம்பிக்கையே துணையெமக்கு நீயே !
தூயவளும் நீயல்லோ நற்தனி வாழும் அருள
மாயவளாய் வீரமதையருளி மனவலிமை பெறவே !
ஆயகலைகளும் ஆயுதமாய் மாறிவர அருளம்மா !

### வரலஷ்மி

உரமிலா உள்ளத்துக்கு ஒளியூட்டும் வரலஷ்மி
திரமிலா தொழில்வளம் பெருகவழி காட்டாயோ
நரகமே மேதினியே என்றேதான் திகைக்கின்றோம்
வரமதுவும் நீயருள்வாய் வல்வினையும் களைந்தேதான் !

### சரஸ்வதி

எல்லையில்லா இன்பமுடன் இன்பச் சிறுரெல்லாம்
தொல்லையில்லா விடிவொன்று இனிது காண்பாரோ ?
நல்லசரஸ்வதியே நற்றுணையும் நமக்கும் நீயல்லோ !
அல்லலின்றி நாவசைய நற்றுணையும் நீயம்மா !

— வேலணை வேணியன்

வீரகேசரி 17.10.1985

## வேலணை
## சரவணை தெங்கங்குளம் ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்பாள் (நாச்சிமார் தேவி)

அரவணைத்து வாழ் நாளில் அவனிதனில் எனைக்காத்த
சரவணை தெங்கங்குளம் மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்பிகையே
பரவியுனை தினம்தொழுதேன் பாடியுனை மகிழ்ந்தேன் தினமே
கரங்குவித்தே வேண்டும் வரம் தருவாய் தாயே!

— வேலணை வேணியன்

## புளியங்கூடல் மகாமாரித்தாயே

சீரோங்கு புளியங்கூடல் பதிமேவு மகாமாரித்தாயே
பாரோரும் போற்றும் பத்தினியே என் இரத்தினமே!
ஏரோரும் எளிதாக விவசாயம் ஓங்கிடவே அருள்பெற்று
வீரோராயின்று பெருவிற்பனராய் இருப்பதுவும் உன்னருளே!

— வேலணை வேணியன்

## புங்கையூர் கண்ணகைத் தாயே

அருட்பெரும் சரித்திரம் பெற்றநம் கண்ணகையே!
திருப்பெரும் புங்கையூர் கண்ணகைத் தாயே தேவியே!
விருப்புடனுனை வேண்டும் வரமெலாம் அருளும் அம்மையே!
இருப்பதுன்கையில் விண்ணகத்தோர் போற்றும் மாமருந்தே!
துருப்பிடித்த இரும்புளங்கள் மனமது திருத்தியேதான்
உருப்படியான இனஇன்னல்கள் நீங்கிய விடிவொன்று
தரும்படியாக வேண்டினோம் வேதியர் தாயே அம்மா!
நெருப்பதுன் சீற்றம் எம் விருப்பது விடுதலைதானே தாயே!

— வேலணை வேணியன்

## தூய மயிலில் பறந்துவா!

இணையிலாத தலைவனே எமது ஈசா முருகனே
இனியவாழ்வு மலர்ந்திட இறைஞ்சினேம் உன்னையே
துணையிலாது நம்மினம் துவண்டுவாடும் போதிலே
துரிதமாகச் செயற்பட தூயமயிலில் பறந்துவா
பிணையிலாத மானைப்போல் பிரிந்துவாடும் மாதரும்
உனையே வேண்டித் துடிக்கின்றார் ஓடிவா வேலவா
அணையிலாத ஆறுபோல் பெருகு கண்ணீர் பார்த்து நீ
விரைவில் வரங்கள் நல்கிட வேலவனே வந்திடாய்

— வேலணை வேணியன்

வீரகேசரி
(1985 மாவிட்டபுரம் தேர்)

## பைந்தமிழ் காவலனே! நல்லூர் வடிவேலவனே!
## (இன்று நல்லூர் தேர் உற்சவமாகும்)

'' செல்லும் '' இடமெல்லாம் சிதறியடித்தே முருகா!
அல்லல் பலவடைந்தே திகைக்கின்றோம் குமரா!
அல்லும் பகலுமதாய் அமைதியில்லை முருகா!
கல்லே அம்மனதுருக கருணைபுரி தேரதனில்!
பல்லோர் போற்றிமகிழ் பைந்தமிழ் காவலனே!
எல்லையில் விடிவான முடிவொன்று காணவும்!
வல்லோன் நீயல்லோ நல்லூர் வடிவேலவனே!

— வேலணை வேணியன்

வீரகேசரி 2.9.1986

## பொங்கலோ பொங்கல்

இகமதில் கண்ணீர் பொங்கிடும் வேளையில்
அகமிக மெலிந்து அஞ்சிடும் காலையில்
சுகமது அறியாத் துயருறு நிலையில்
முகமது மலரப் பொங்கலோ பொங்கல் !

— வேலணை வேணியன்

வீரகேசரி 14.1.1987

# இறைவனுக்கு நன்றி! இன்னும்...!

எனை ஈன்றவளிலும் இனியவளாம் என் தமிழ் அன்னைக்கு என் முதல் வணக்கமும் நன்றியும். அடுத்து எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆவான் எனும் முது மொழிக்கேற்ப பாடசாலைகளில் கல்வி எனும் சிறந்த பயிரை எனக்கு வளர்த்தளித்த ஆசிரியப் பெருந்தகைகள் அனைவர்க்கும் என் நன்றி எனை வாழ்வில் பெரியோர் நல்லாசிகள் பெற இவ்வுலகிற்கு ஈன்றளித்த பெற்றோர்க்கு நன்றி. கவிதை ஆர்வமூட்டி என் கவிதைகளை இலங்கை தமிழ் தேசிய தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரமாக்கி வெளியிட்ட வீரகேசரி, தினகரன், ஈழநாடு போன்ற பத்திரிகைகளின் பிரதம, உதவி ஆசிரியர் குழாம் பெரியோர்க்கும் என் நன்றி. விசேஷமாக '' வீரகேசரி '' தமிழ் தேசிய தினசரி ஆசிரியர்கள் இலங்கை வானொலி அன்பர்கள் அனைவர்க்கும் என்றும் நன்றியுடையவனவேன். என் கவிதை நூலுக்கு ஆசியுரைகள் அனுப்பிய பெரியோர்கள், என் அருமைக் கவிதை நண்பர்கள், கவிஞர்கள், நூலை வெளியிடப் பொருளாதரவு நல்கிய கொடை வள்ளல்கள், சிறப்புற அச்சிட்டு உதவிய மெய்கண்டான் பதிப்பகத்தார், இன்னும் தவருக மறந்துவிட்ட பெரியார்கள் நண்பர்கள் அனைவர்க்குமே என் உளம் கனிந்த வணக்கமும் நன்றியும் உரித்தாகுக.

— வேலணை வேணியன்
(வை. கங்கைவேணியன்)

'சுவையகம்',
தலைகாட்டி,
வேலணை.

## மருதடி விநாயகர் துணை

இருள் சூழ்ந்த வாழ்வே அநுபவித்தேன்
அருள் வேண்டி உனையும் துதிக்கின்றேன்—என்றும்
மருதடி விநாயகனே இவ்வருட் கவிதைகளை
தருமடியனையும் காப்பாய் கணபதியே !

முல்லை நறுமலர் எடுத்துத் தொடுத்துனக்கு
கல்லையும் உருகவே நற்றமிழ் கவிபாடி—சூட்டியே
எல்லையில் எல்லாப் புகழ்தானும் சேரவிறைஞ்சியுமே
தொல்லையறு வரம் கேட்க்கும் தூயணேபதியே !

பைந்தமிழின் சுவைநன்கறிந்த துங்கை முகத்தோனே
எந்தையெழில் முருகனுக்கும் மூத்தோனே கணபதியே
விந்தையுலகதனில் வீறுகொண்டு வாராயோ இதுதருணம்
நொந்தமனம் தெளியவைப்பாய்த் நூயநற் கணபதியே !

அன்னையவள் கண்ணீர் அலைமோதச் சிந்துகிருள்
தன்மைந்தர் தனையெண்ணிப் புலம்பியே அழுகின்ருள்
என்னையா விநாயகனே உன்திரு விளையாட்டும்
உன்னையே வேண்டுகிரும் உறுதுணை என்றேதான்

— வேலணை வேணியன்

## கதிரமலைப் பாலாநீயும் வந்திடுவாய்

விண்ணே அதிர உன்வேலும் இன்று எம்
  முன்னே தானும் ஓடி வர முருகா !
மண்ணே அதிரக் கொஞ்சும் சலங்கையுடன்—நீ
  எம்முன்னே வருவாய் வடிவேலா !
கண்ணே ! மணியே ! கதிரமலைக் கரசே—நீ
  வெய்ய அரவைக் தாக்கிடவே புள்ளிமயிலுடனே !
பண்ணே இரங்கி இசைக்கின்ரும் எமைக் காக்க
  கதிரமலைப் பாலா நீயும் வந்திடுவாய் !

— வேலணை வேணியன்

(ஆடிவேல் மலர்)
வீரகேசரி 23.07.1983

## கந்தனே உன் கழலடி சரணமே

எதிரிலாத தலைவனே எம்தன் துணைவா முருகனே
கதிரமலைக்கரசனே கருணைகொண்டு காத்தருள்
கதியிலாது நம் இனம் கதறிவாழும் போதிலே—நீ
மதியைக் காத்துச் செயல்பட வரமருள் கந்தனே
விதியின் சோதனை போதுமே விரைந்துவந்து காத்திடாய்
துதிசெய் அடியர் துயரெலாம் பஞ்செனப் பறக்கவே
அதிபா ! அசுரர் குலத்தையே அழித்தொழித்த வேலவா
கதிரமலைக்கதிபனே உன்கழலடி சரணமே !

— வை. கங்கைவேணியன்

வீரகேசரி
12.07.1983

## எங்கள் அன்னை சதா சகாய மாதா

அல்லலெலாம் களைந்தெறியும் அன்னை சகாயமாதா
திருநாள் பொரளை நகர் பதியில் இன்று
வல்ல எம்தாயார் வள்ளல்கள் வறியவர்கள்
அனைவர்க்கும் அருள் அள்ளிவழங்குவள்
சொல்லொண்ணு கண்ணீர் சொரிந்தே இன்று
குவிந்து நிற்பர் அன்னை பதிதனில் ஆயிரமாய்
நல்ல எங்கள் அன்னை சதாசகாய மாதா
நல் வரம்பல அருள்வாள் வாழி

வீரகேசரி
27.06.1984

**வை. கங்கைவேணியன்**

## பொங்கலோ பொங்கல்

இகமதில் கண்ணீர் பொங்கிடும் வேளையில்
அகமிக மெலிந்து அஞ்சிடும் காலையில்
சுகமது அறியாத் துயருறு நிலையில்
முகமது மலரப் பொங்கலோ பொங்கல் !

— வேலணை வேணியன்

வீரகேசரி 14.1.1987

## இன்று சிவராத்திரி

இன்னும் இடும்பை எமக்குண்டோ
எம்சிவனே குருநாதா
பின்னும் பின்னும் எமக்குமுன்
அருட் சோதனையோ சிவனே
என்ன வினைதான் சூழ்ந்ததுவோ
இறைவா எம் குருநாதா
மன்னவனே தில்லைக்கு அதிபா
அல்லல் களைந்திட வாராயோ
அன்னநடை மடவாளொடு இந்த
அகிலாமெலாம் காத்திடவே ஐயனே
இன்னலெல்லாம் எம்மிடையே களைந்து
இனிய தமிழ் காத்தும்
முன்னோர் சொன்ன பிரகாரம் நாம்
விரதமுடன் இன்று சிவராத்திரியை
உன்இன்னமுத பொற்பாதம் இனிது
வணங்கியென்றும் களித்திடுவோம்

வை- கங்கைவேளியன்

வீரகேசரி—29.02.1984

## உன்நாமம் மறவோம் புனித அந்தோனியாரே!

அன்பின் அடியவர்கள் அல்லலெலாம் என்றும்
தீர்த்தருளும் ஐயனே புனித அந்தோனியாரே !
என்பெலாம் உருகிச்செவ்வாய் தோறும் நாம்
உன்பதி நாடி வந்தே குழுமி நின்றே
தன்னையே மறந்த நிலைதனில் தரை புரண்டு
முழந்தாளிட்டு தமியோம் தவித்துமே தான்
என்னதான் விந்தையையா ஏங்கினோம்
புனித அந்தோனியாரே நீருமே இரங்கி
சொன்ன பாவங்கள் தீர்த்துத் துரிதமாய்
வரமருள்வீர் புனிதரே போற்றி
பின்னை உன்நாமம் மறவோம் எம்
புனித அந்தோனியாரே வாழ்க !

— வை, கங்கைவேணியன்

வீரகேசரி
23.06.1984

## மருதடிப்பதி விக்கின விநாயகா!

இருவினைப் பிறவியின் இருளதகற்றியே அருளும்
ஏந்தலே மருதடிப்பதி மேவியவிக்கின விநாயகா !
வருமுதல் துன்பம்பிரபவ புத்தாண்டில் தானும்
வனப்புறு தேர்மிசைவந்தே அருள்வாய் நீ !
அருமுதல் பொருளே எம்அம்பிகைபாலனே நீயும்
கருகியமனதின் மருந்தாய் மாறி வந்தருளாயோ!
தருமருள் தானும் தரணிதனிலே தலைவிரித்தாடும்
வன்செயலது ஒடுக்கிய தண்ணருள் தானுமே !

— வேலணை வேணியன்

பிரபவ வருட
1987 புத்தாண்டு வாழ்த்துக்கள்
அன்பர்கள் அனைவருக்கும்

வீரகேசரி 14.4.87 செவ்வாய்கிழமை

## அமைதியாய்த் துதிக்கின்றோம் இறைவா!

### வை. கங்கைவேணியன்

நல்லதொரு திருநாள் இன்று நலமே நாம் என்றும்
வல்லபிரான் அருளால் வாழ வழி வகுப்போம்
தொல்லைகள் பல நீங்கித் துயரக்கண்ணீர் துடைத்து
அல்லல் பல பட்டோரையும் அரவணைத்து அன்பால் என்றும்
எல்லைத் துணையும் இனிதேபெற்று இன்பமுடன் வாழவும்
கல்லையொத்த மனமுருக அமைதியாய்த் தீபாவலியை
நல்லறம்காத்து நலம்பெற்றே நற்றமிழ் ஓங்க என்றும்
சொல்லு நல் அமைதியாய்த் துதிக்கின்றோம் இறைவா!

வீரகேசரி
04.11.1983

# "கங்கை பொங்குது"
# அருட்கவிதைத் தொகுதிக்கு ஆசி

''வேலணைவேணியன்' என்ற வாய் இனிக்கும் புனை பெயரில் நெஞ்சினிக்கும் அருட் கவிதைகளை நெடுங்காலமாக எழுதிவரும் கங்கைவேணியன் பாடற்றிரட்டு, ''கங்கை பொங்கும்'' என்ற பொருத்தமான பெயருடன் வெளிவருவது காலம்கடந்தேனும் நடைபெறுகிற நல்ல காரியம்.

வேணியன், காரிகை கற்றுக்கவி பாடும் வெற்றுச் சொல்லடுக்கு' விறுதாப்' புலவரல்லர். அவர் அருட்கவி நெகிழ்ந்த உள்ளத்திலிருந்து நெறி பிறழாது இயல்பாக எழும் புலமைக் கிளர்ச்சியால் கனிந்து வரும் கவிதைகள் அவருடையவை. மறம் கடிந்து அறம் போற்றி மருள்நீங்கி அருள்பொங்கும் பொருள் பொதிந்த துங்கக் கவிதைகள்.

வேனியனின் எழுதுகோலில் ஊற்றெடுத்து, அன்பில்லார் நெஞ்சமெல்லாம் 'அதிர வரும்' அவரின் ''பொங்கும் கங்கை'', வன்கணாளரை, 'மனத்துக்கண் மாசிலராக்கட்டும்' என் மனப்பூர்வமாக ஆசி கூறி வாழ்த்துகிறேன்.

(வி. ஏ. திருஞானசுந்தரம்)
தமிழ்சேவைப் பணிப்பாளர்.
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
கொழும்பு–7.

வீ. ஆனந்தசங்கரி
சட்டத்தரணி
முன்னாள் பாராளுமன்ற
உறுப்பினர்
கிளிநொச்சி

கிளிநொச்சி
20.7.1986

பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கைத்தமிழ் தேசிய தின சரிப்பத்திரிகைகளில் திரு. வை. கங்கைவேணியன் அவர்கள் அருட்கவிதைகளை " வேலணை வேணியன் " எனும் புனை பெயருடன் வாசித்து மகிழ்ந்திருக்கின்றேன். இன, மொழி ப்பற்றுடைய இவரது ஆக்கமாக வெளிவந்த கவிதைகள் " கங்கை பொங்குது " எனும் நூலாக வெளிவருவதை மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றேன். படிப்பவர்கள் ஒவ்வொரு வரும் இனமொழிப்பற்றைத் தூண்டும் கவிதைகள் எனப் பாராட்டாமல் இருக்கமாட்டார்கள். தெய்வீக நம்பிக்கையை உறுதியாகக் கொண்ட இக்கவிஞரை " ஞானக்கவி "எனயப் பெயர் சூட்டி மகிழ்வதோடு, இவரது " கங்கை பொங்குது" அருட்கவிதைத் தொகுப்பையும் மகிழ்ச்சியுடன் வாழ்த்து கிறேன்.

கங்கை எங்கும் பொங்கி மலரட்டுமெனவும் வாழ்த்து கிறேன்.

வீ. ஆனந்தசங்கரி

அ, அமிர்தலிங்கம்
அரசு விருந்தினர் மாளிகை
சேப்பாக்கம், சென்னை—5
தொலைபேசி : 566920

மூளாய், சுளிபுரம்.
இலங்கை

அடிக்கடி பத்திரிகைகளில் படித்து மகிழ்ந்த வேலணை வேணியனின் கவிதைகள் நூலுருப்பெற்று எல்லோர் கரங்களிலும் தவழ இருப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன் ஆழ்ந்த கடவுள் பக்தி நிறைந்த, தமிழ் பற்றும் கொண்ட வேணியன் கவிதைகள் இந்த உணர்ச்சிகளைப் படிப்போர் உள்ளத்திலும் பாய்ச்சும் தன்மை வாய்ந்தவை. கவிஞர் வேணியன் இறவாத புகழுடைய கவிதைகள் பலவற்றைப் படைக்க இறைவன் அருள் பாலிப்பாராக.

அ. அமிர்தலிங்கம்

20–7–1986

---

செல்லையா இராசதுரை
பிரதேச அபிவிருத்தி அமைச்சர்
26.9.1984

திரு. கங்கைவேணியன்
பழைய சோனகதெரு
கொழும்பு

பத்திரிகையில் வெளிவரும் கவிதைகளை சில சமயங்களில் படித்திருக்கின்றேன். கவிதைகள் கட்டுடைத்துப் பாயும் வெள்ளத்தைப் போன்றது.

தங்களிடம் குடிகொண்டிருக்கும் ஆற்றலை வெளிக்கொணர்ந்து நல்ல கவிதைகள் எழுதி, நாடும் ஏடும்போற்ற சிறந்த கவிஞராக வரவேண்டும் என்பது எனனுடைய ஆசை. பகவான் திருவருளினுல் எல்லா நலனும் கிடைக்கப் பிரார்த்திகின்றேன்.

இங்ஙனம்
செ. இரசசதுரை
(பிரதேச அபிவிருத்தி, இந்து சமய, இந்து கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சர்)

பொன் ராஜகோபால்

ஆசிரியர்,

வீரகேசரி வாரவெளியீடு

திரு. வை. கங்கைவேணியனின் அருட்கவிதைகள் அவர்தம் பக்தி சிரத்தையின் பயனாக ஊற்றெடுத்துப் பிரவகித்தவை இறைதியானத்தில் மூழ்கி அவர் பறவைக்காவடியில் வலம் வந்து தன் ஆத்ம பலத்தை நிரூபித்தவர். அருட் கவிதை யாப்பதில் கூட அந்த ஆத்ம பலம் கைகொடுத்திருக்கிறது. தான் வணங்கும் இறைவனை இறுக்கிப்பிடிக்கும் காரணத்தால் இவருக்கு எல்லாமே சுலபமாகிவிடுகிறது. எடுத்த காரியங்களைச் சோரவிடாமல் அவர் நிறைவேற்றுதற்கு, அவர்தம் ஊக்கமும், அயரா உழைப்பும் உட பெரிதும் கைகொடுக்கின்றன.

இவ்வருட்கவிதைகளை யாத்ததில் இவர் பெற்ற இன்பம் ஏனையோர்க்கும் கிட்டுவதாக.

பொ. ராஜகோபால்

கொழும்பு
3-8-86.

செ. நடராசா
செய்தி ஆசிரியர்,
வீரகேசரி.

பொங்கும் கவிதை உள்ளம் கொண்டவர் அன்பர் வை. கங்கைவேணியன். ஆறுபடை வீடுகளைச் சிறு வயதிலேயே தரிசித்துக்கடவுளரின் ஆசியைப்பெற்ற பெரும் பாய்க்கியசாலி அதனுல்தான் அவர் பொங்கி வடிக்கும் கவிதைகள் யாவும் இறைசுவை, இன்சுவை ஒருங்கே அமையப்பெற்று விளங்குகின்றன. அவர் யாத்த இந்த அருங்கவிதை முத்துக்குவியல் அவரது கவித்துவத்துக்கு தக்க சான்று பகர்கின்றன.

அவரது இந்த முயற்சி வெற்றி கண்டமை குறித்து மனம் மகிழ்வதோடு அவருக்கு எல்லாம் வல்ல இறைவன் சகல சம்பத்துகளேயும் கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு
செ. நடராசா

கொழும்பு
3-8-86.

ஈ. வே. டேவிட்ராஜு
(முன்னாள் வீரகேசரி பதிலாசிரியர்)

மன்னர் காலித் சர்வதேச
விமான நிலையத் திட்டம்,
யதிரத்.

சாந்தமும் இனிய சுபாவமும் கொண்ட அன்பர் வை. கங்கைவேணியன், தமது பொருள் செறிந்த உரையாடலினால் எவரையும் நன்கு கவரக் கூடியவர். இந்த இளைஞரிடம் வாக்குச் சாதுரியத்துடன் எழுத்தாற்றலும் கவிதையூற்றும் குடிகொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நற்பணி புரிவதில் நாட்டம் கொண்ட இந்த நல்லவர் வேலணை வேணியன்' எனும் புனைபெயரில் யாத்து, வீரகேசரி, தினகரன், முதலான ஏடுகளில் வெளியிட்ட கவிதை முத்துக்களை இப்போது தொகுத்து நூல் வடிவில் '' கங்கை பொங்குது ''—அருட்கவிதை முத்து குவியலாக தமிழன்னையின் பாதங்களில் சமர்ப்பிக்கிறார். இந்த மேலான பணியினை உளமாரப் போற்றி ஆசியுரைவழங்குவதில் உவகையடைகிறேன்.

கவிதைகளைக் குழந்தைகளுக்கு ஒப்பிடலாம். அவை கல்நெஞ்சம் படைத்தோரையும் நெகிழவைப்பவை. அவை சிரித்தால், நாம் சிரிப்போம். அவை சோகத்தை வெளியிடும் போது நாமும் துயரில் ஆழ்ந்து விடுகிறோம். சமூகத்தில் இத்தகைய பெரும் தாகத்தை ஏற்படுத்தவல்ல கவிஞனுக்கு அனுசரணையும் ஆதரவும் அளிப்பதே கவிதை யூற்று, வற்றாத நதியாக வெளிப்பட வழிகோலும்.

நண்பர் கங்கைவேணியனின் இந்நற்பணிக்கு நல்லாதரவு வேண்டும்.

இ. வே. டேவிட் ராஜு

14-2-1987

கணா. சுபாஷ்சந்திரபோஸ்
சிரேஷ்ட உதவி ஆசிரியர்
வீரகேசரி
எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ்
சிலோன் லிமிடட்

1.9.1986

கவிஞர் திரு. வை. கங்கைவேணியனின் அருள் சுரக்கும் கவிதைகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை பத்திரிகையில்வெளியான கவிதைகள் மூலம் அவரது திறமை வெளியாகியுள்ளது. கவிதைத் தொகுதிகளை உள்ளடக்கி '' கங்கை பொங்குது'' என்ற தலைப்பில் கன்னிமுயற்சியாக இதை வெளியிடுகிறார். தமிழுலகுக்கு அவர் தொடர்ந்து பங்களிப்பை நல்குவதுடன் அவரது முயற்சிகளுக்கு இறைவனின் கடாட்சம் கிடைக்க வாழ்த்துகிறேன்.

அன்பின்,

கணா. சுபாஷ்சந்திரபோஸ்

தெளிவத்தை ஜோசப்

95, ரஜமல்வத்தை
கொழும்பு-15

கடந்த கால் நூற்ருண்டு காலமாக கவிதையுடன் தொடர்பு கொண்டு கவிஞராகத் நிகழும் திரு. வை. கங்கைவேணியன் அவர்களது கவிதைகள் ஒரு நூலாகத் தொகுக்கப்படுவது அறிந்து மகிழ்கின்றேன்.

ஒரு கவிஞனின் அந்தராத்மாவின் அறை கூவலே கவிதை. அது தெய்வீகத் தன்மை வாய்ந்தது. இந்தத் தெய்வீக தன்மையே சகலரையும் தன்பால் ஈர்த்துக் கொள்கிறது. அந்த ஈர்ப்பே கவிஞர் வேலணை வேணியனையும் ஆட்கொண்டுள்ளதை அவரது கவிதைகள் நன்கு உணர்த்துகின்றன.

அங்கிங்கெனுதபடி அனைத்தையும் ஒன்ருகக்கோர்த்தெடுக்கும் அவரது முயற்சி வெற்றி பெறவும், அவரது கவிதைப் பணி சிறக்கவும்—கங்கையாகப் பொங்கி வரவும், இறைவன் அருள் புரிய வாழ்த்துகின்றேன்.

வளரட்டும் அவரது இலக்கியப் பணி !

அன்புடன்,

க. ஜோசப்

23.12.1984 வீரகேசரி வாரவெளியீடு

# "இலக்கியச் செய்திகள் — ரஸஞானி"

## இயல்பான கவிஞர் கங்கைவேணியன்

கவிஞர்களில் பல ரகத்தினர் உண்டு என்பதை அறிவீர்கள். பிறவிக் கவிஞர், பயிற்சியால் முதிர்ந்த கவிஞர். எந்நேரமும் கவிபாடும் திறம்பெற்றவர் எனக் கவிஞர்களை வகை வகையாக தரம் பிரிக்கலாம்.

அந்த வரிசையில் எந்நேரமும் கவிதை இயற்றி அதற்குப் பண் அமைத்து இராகத்தோடு பாடும் வல்லமை பெற்றவர் கங்கைவேணியன்.

பகுத்தறிவாளர்களை பகுத்தறிவு காப்பாற்றட்டும், தெய்வநம்பிக்கை மிக்கவர்களை தெய்வங்கள் காப்பாற்றட்டும் என்று ஒரு சந்தர்ப்பத்தில் ஜெயகாந்தன் குறிப்பிட்டார்.

கவிஞர் கங்கைவேணியன் தெய்வ நம்பிக்கை மிகுந்த கவிஞர். காரணம் பல சந்தர்ப்பங்களில் அவர்தம் அங்கங்களில் வேல் குத்தி பறவைக் காவடி எடுத்தவர். திருச்செந்தூர் முருகன் சந்நிதானத்தில் அவர் பறவைக்காவடி எடுத்தபோது தமிழக தினசரிகள் முக்கியத்துவம் கொடுத்து செய்திகளைப் படத்துடன் வெளியிட்டன.

எவரேனும் வியத்தகு சாதனைகள் புரிந்தவர்கள் மறைந்தால் அல்லது மறைந்தநாள் வந்தால் கங்கைவேணியனின்கரம் ஓய்ந்திருக்காது. உடனே எதனையாவது கவிதையாக எழுதிவிடும். அது விருத்தமாகவோ, செய்யுளாகவோ, வெண்பாவகவோ கவிதையாக இருக்கலாம்.

யதார்த்தமான சமுதாய கணிப்பீடுகளை இவர் தரத்தவிறனும் எப்பொழுதும் கவிதை இயற்றிப் பாட வல்லவராக ராகவே. விளக்குவது தனிச் சிறப்புத்தான்.

# தமிழகம் சென்று பறவைக்காவடி எடுத்தார்

பொகவந்தலாவ பொகவான தோட்டத்தைச் சேர்ந்த திரு.வை. கங்கைவேணியன் தனது நேர்த்திக்கடனை தீர்க்க திருச்செந்தூர் கோவிலில் ஆவணித் திருவிழாவில் கலந்து கொண்டு பறவைக் காவடி பூட்டி சுமார் இரண்டு மணித்தியாலங்கள் பக்தர்கள் புடைசூழ பவனிவந்தார் இந்நிகழ்ச்சியை திருவிழாவுக்கு வந்த பல்லாயிரக்கணக்கான பக்த்தர்கள் கண்டு பெரும் ஆச்சரியமும் அதிசயமும் அடைந்தனராம்.

இவரது இந்த நேர்த்திச் செயலை தென்னிந்தியா பத்திரிகைகளான மாலை முரசு, தினமலர் போன்றவையும் அதிசயம் அற்புதம் எனப் புகழ்ந்து எழுதியுள்ளன.

(பொகவந்தலாவ நிருபர்)

நன்றி ! வீரகேசரி 7.9.1969 சனிக்கிழமை)

12.9.1969 தினமலர் பிரசுரித்த செய்திக்கும் என் நன்றி உரித்தாகுக.

வீரகேசரி வார வெளியீடு 20-1.1986

# "ரஸஞானி"

கங்கை வேணியனின்
"கங்கை பொங்குது"

நீண்ட காலமாகப் பத்திரிகைகளில் அருள்சுரக்கும் கவிதைகளை எழுதித் தமிழ் அன்னைக்கு அணிசேர்த்த கங்கை வேணியன் வெகுவிரைவில் தமது நூல் ஒன்றை வெளியிட உள்ளார்.

கடவுள் நம்பிக்கை உள்ளவர்களை கடவுள் காப்பாற்றுவார், பகுத்தறிவில் நம்பிக்கையுள்ளவர்களை பகுத்தறிவு காப்பாற்றட்டும்—என்று முன்பொரு சமயம் ஜெயகாந்தன் குறிப்பிட்டது இச்சமயத்தில் நினைவுக்கு வருகிறது.

மனிதனாகப் பிறந்தவனுக்கு ஆறறிவுண்டு என்கிறோம். முருகனை 6 தடவைகள் பறவைக்காவடி எடுத்தமையால்தான் எனக்கு ஆறறிவு கிட்டியது என்கிறார் கவிஞர் கங்கை வேணியன்.

நாட்டில் சமாதானமும் அமைதியும் தோன்ற வேண்டுமென்பதற்காக பிரார்த்தனைகள், வழிபாடுகள் ஆங்காங்கே நடப்பதைக் கண்டிருக்கின்றோம். கங்கை வேணியனுக்கும் இந்தப்பணிகளில் மிகுந்த ஈடுபாடுண்டு. அதற்கும் மேலாக தமிழன்னை தற்போது துயரக்கண்ணீர் வடிப்பதனால்—அவள் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகி ஓட வேண்டுமென வேண்டி தனது புதிய நூலை வெளியிட இருக்கிறார் கங்கைவேணியன்.

"கங்கை பொங்குது" என்ற தலைப்பின் அர்த்தத்தையும் தாற்பரியத்தையும் இந்நூல் வெளியீட்டின் மூலம் அறியலாம். அதுவரையில் பொறுத்திருப்போம்.

*


[பொகவந்தலாவ பொகவான குருப்பைச் சேர்ந்த திரு. வி. கங்கைவேணியன் தமிழகத்திற்கு விஜயம் செய்துதிருச்செந் தூர் முருகப்பதியில் தனது நேர்த்திக்கடனை முடித்து இலங்கை திரும்பியுள்ளார். திரு. கங்கைவேணியன் திருச்செந்தூரில் பறவைக்காவடி எடுத்து நேர்த்திக்கடனை செலுத்துவதையும் காவடி எடுத்து முடிந்தபின் அங்கு குழுமியிருந்த பக்தர் களுக்கு விபூதி பகிர்வதையும் படங்களில் காண்க. வேலணை யைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. கங்கைவேணியன் கதிர்காமம் பொகவந்தலாவ—தெண்டாயுத பாணி கோவில் திருச்செந்தூர் ஸ்தலங்களில் ஐந்து தடவைகள் பறவைக் காவடி எடுத்துள்ளார்.

கடைசியாக 6 வது தடவை நயினை—நாகபூஷணி அம்மன் கோவில் 1970 ஆம் ஆண்டு 11ம் திருவிழாவில் பறவைக் காவடி எடுத்ததும் குறிப்பிடத்தக்கது.

நன்றி !

தினகரன் 1969.10.20 திங்கட்கிழமை

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.





V. KANGAVENIAN
64/63A
ST. BENEDICT
MAWATTA
COLOMBO-13



## வேலணை வேணியன்

அருட்கவி புனைவதில் ஆற்றல்மிக்க கங்கைவேணியன், இறை நம்பிக்கை மிக்கவர். எம் மதமும் சம்மதம் என்ற உன்னத நோக்கம் கொண்டவர்.

அமைதியாக செயல்பட்டு சமய, சமூகத்தொண்டு புரியும் ''வேணியன்'' இயல்பாகவே கவிதைகளை எழுதுவதில் திறன் மிக்கவர்.

எழுதி வாசிக்காமலேயே கவிதைகளைப் பாடத்தெரிந்தவர். அவற்றில் ஓசை, நயம் நிரம்பியிருக்கும். இது பயிற்சியால் வந்த தேர்ச்சியா என்று கேட்டால், இல்லை ஆறுபடை முருகன் கொடுத்த கொடை என்பார்.

கங்கை—புனிதமானது. அது பொங்கிப் பிரவகித்தால் எப்படி இருக்கும் என்று எழுத வார்த்தைகள் இல்லை. வேலணை வேணியனின் கங்கை பொங்கியுள்ளது.

“லெ. முருகபூபதி”
வீரகேசரி 3–8–86